கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாரம், ஜி.அரியூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட வட்டாரப் பொது சுகாதார அலகு கட்டிடத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (26.12.2024) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் உள்ளிட்ட பலர் உள்ளார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் கருநிலம் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்புள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடையினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள்,அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

உத்தரப்பிரதேசம் – மணிப்பூரில் பெண்கள் பாதிப்புக்கு என்ன செய்தார்?

அண்ணாமலை சாட்டையால் அடித்துக்கொள்வதை மக்கள் கேலிக்கூத்தாகப் பார்க்கிறார்கள்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, டிச.28-

அண்ணாமலை சாட்டையில் அடித்துக் கொண்டு செருப்பு போடாமல் நூதன முறையில் போராடப்போவதாக கூறுவதை மக்கள் கேலிக் கூத்தாக பார்க்கிறார்கள். இது போன்ற செயலை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் கூறினார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆளுநரால் நியமிக்கப்படுகின்ற துணை வேந்தரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தன்னாட்சி நிறுவனம். எடப்பாடி முதலமைச்சராக இருக்கும்பொழுது அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை நியமிப்பது முதலமைச்சருக்கு வழங்க வேண்டும்.. ஆக முழு பூசணிக்காய் சோற்றில் மறைப்பது போல மறைத்துவிட்டு எடப்பாடி பேசிக்கொண்டிருக்கிறார்.

துணைவேந்தர் தெளிவுபடுத்திட வேண்டும்!

அண்ணா பல்கலைக்கழகத்தில் 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்க வேண்டியத் துணைவேந்தர் கீழ் இயங்கும் நிர்வாகத்தின் கடமையாகும். அங்கு பாதுகாப்பு காவலர்களை பணியில் அமர்த்தி இருக்கிறார்களா இல்லை அமர்ந்ததுபோல் கணக்கு காண்பித்து இருக்கிறார்களா என்பதெல்லாம் குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த சம்பவம் நடந்து 6 மணி நேரத்தில் குற்றவாளியை காவல் துறை பிடித்துள்ளார்கள். அவரிடம் விசாரணை செய்து வருகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் திசைதிருப்பும் வகையில் பேசிக் கொண்டிருக்கின்ற எடப்பாடி அவரது ஆட்சியில் பொள்ளாச்சி யில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் கதற கதற பாலியல் வன்கொடுமை உள்ளாக்கியவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுத்தார் எடப்பாடி?

பெண் புகார் அளித்தார்!

ஆகவே சம்பந்தப்பட்ட பெண் புகார் அளித்ததின் அடிப்படையில் உடனடியாக புலன் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அண்ணாமலை நூதன முறையில் சாட்டையில் அடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்.

பொள்ளாச்சியில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யும் பொழுது சாட்டை கிடைக்கவில்லையா. தற்பொழுது அவர் லண்டன் சென்று சவுக்கை வாங்கி வந்தது போல் தெரிகிறது.

தற்போது எந்த பதவியும் இல்லாமல் இருக்கும் அண்ணாமலைக்கு ஜோசியக்காரர்கள் யாரோ 40 நாள் சாட்டையில் அடித்துக்கொள்ள வேண்டும் என்று கூறியதால் இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு அண்ணாமலை இதை அறிவித்துள்ளார். இது ஒரு பகுத்தறிவு இல்லாத காட்டுமிராண்டித்தனத்தை காண்பிக்கின்றது.

மணிப்பூரில் பெண்கள் பாதிப்பு!

எனது 62 ஆண்டு அரசியல் வாழ்க்கையில் யாரும் இது போன்ற ஆர்ப்பாட்டத்தை செய்தது கிடையாது. இப்படி ஆர்ப்பாட்டம் செய்பவர் மணிப்பூரில் ஆயிரக்கணக்கான பெண்கள் பாதிக்கப்பட்ட பொழுது ஏன் அதற்காக குரல் கொடுக்கவில்லை.

உத்தரப்பிரதேசம் மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அன்றாடம் இது போன்ற விஷயங்கள் நடைபெற்று வருகிறது. அங்கே எல்லாம் போகாதவர் இங்கு தமிழ்நாட்டில் செய்கிறார் என்று சொன்னால் இது ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது.

தி.மு.க. ஆட்சியில் இருக்கும் வரை காலணி அணிய மாட்டேன் என்று கூறியிருக்கிறார். அப்படி என்றால் காலம் பூராவும் அவர் செருப்பே போட முடியாது. அண்ணாமலையின் செயல் மக்களுக்கு ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது. அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தி.மு.க. அரசு பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசு பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற அரசாக இருக்கிறது. அந்த குற்றவாளி தி.மு.க.வை சார்ந்தவர் என்று பெரிய குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் அது முற்றிலும் தவறானது.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து 1000 கனஅடி நீர் திறப்பு:

கொசஸ்தலையாறு கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல நீர்வளத்துறை அறிவுறுத்தல்!

சென்னை, டிச. 28-

பூண்டி நீர்த்தேக்கத்தி லிருந்து விநாடிக்கு 1000 கனஅடி நீர் திறக்கப்படுவதால் கொசஸ்தலையாறு கரையோர மக்களுக்கு வெள்ளஅபாய எச்சரிக்கை விடுப்பட்டுள்ளது. சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான பூண்டி நீர்த்தேக்கம் 34.58 சதுர கீலோ மீட்டர் பரப்பளவில் திருவள்ளூர் மாட்டத்தில் அமைந்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமொத்த உயரம் 35 அடியாகும். இதன் முழு கொள்ளவு 32.31 மில்லியன் கன அடியாகும். 31.21 மில்லியன் கன அடியாகவும் மற்றும் பூண்டியின் நீர் வரத்து 1290 கன அடியாக உள்ளது. தற்போது அணையின் நீர் பிடிப்பு பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதாலும், மேலும் நேற்று இரவு ஆந்திர மாநிலம் கிருஷ்ணாபுரம் அணையில் இருந்து 1000 கன அடி நீர் திறக்கப்பட்டதாலும் பூண்டி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

நீர்வரத்து அணையின் முழு கொள்ளளவான 35 அடியை தொட்டுவிடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. அணையின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திற்கு வரும் உபரி நீரினை அணையின் பாதுகாப்பு கருதி காலை 9 மணி முதல் வினாடிக்கு 1000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

எனவே நீர்த்தேக்கத்தி லிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, நெய்வேலி, எறையூர், மணலி, மணலி புது நகர், சடையான்குப்பம், எண்ணூர் உள்ளிட்ட கொசஸ்தலையாற்றின் இருபுறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்படுகிறது.

மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு நீர்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

பட்டா மாறுதல்: இணைய வழி சேவை தற்காலிகமாக நிறுத்தம்!

சென்னை, டிச.28-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் இணையவழி பட்டா மாறுதல் சேவையான "தமிழ் நிலம்" மென்பொருளில், விவசாயிகள் விபரப் பதிவேடு (Farmer Registry) தொடர்பான தொழில் நுட்பப் பணிகள் மேற்கொள்ளஉள்ளதால், வரும் 28.12.2024 காலை 10.00 மணி முதல் 31.12.2024 மாலை 4.00 மணி வரை இணையவழி பட்டா மாறுதல் மேற்கொள்ளும் "தமிழ்நிலம்" (https://tamilnilam.tn.gov.in/Revenue/ மற்றும் https://eservices.tn.gov.in/eservicesnew/index.html) இணையவழி சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.